09.01.2025

C.C. No.63/2024
ம.சா. 1 குறிஞ்சி மலர்

குறுக்கு விசாரணை

1) எதிரி எப்படி பழக்கம் என்றால் எதிரி என்னுடன் வேலை பார்க்கிறார். அவரை 3, 4 வருடங்களாக தெரியும். நான் சாக்கோட்டை ஜெயங்கொண்டான் ஊராட்சி சுக்கானேந்தல் என்ற ஊரில் அங்கன்வாடி பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரியின் கணவர் வீரக்குமாரை எப்படி தெரியும் என்றால் எதிரி மூலம் தெரியும். 14.06.2023 ல் ரூ.3 லட்சத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்துக்கொடுத்தேன். எதிரி மட்டும்தான் வந்து பெற்று சென்றார். நான் கொடுத்தாக சொல்லும் பணத்தை எவ்வாறு ஏற்பாடு செய்தேன் என்றால் எனது நகைகளை கனரா வங்கியில் அடமானம் வைத்து கொடுத்தேன். 14.06.2023 ல் நான் ரூ.3 லட்சத்திற்கு ஒரே முறையில் அடமானம் வைத்து கொடுத்தற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன். நகைகளை ரூ. 2 லட்சத்து 20 ஆயிரத்திற்கும், ரூ.83 ஆயிரத்திற்கும் அடகு வைத்து பணம் கொடுத்தேன். அதற்கான ரசீதுகளை தாக்கல் செய்திருக்கிறேன். புகார்தாரருக்கு ரூ. 3 லட்சம் கடன் கொடுத்தேன்.

2) 08.08.2023, 22.08.2023, 23.08.2023, 07.09.2023, 16.06.2023 என பல்வேறு தேதிகளில் எதிரிக்கு நான் கடன் கொடுத்தாக சொல்லும் பணத்திற்கு வேறு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றதில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் நகை அடமான ரசீது தாக்கல் செய்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 3 காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் ம.சா.ஆ.12 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 கடனுறுதிசீட்டில் உள்ள எதிரியின் கையொப்பத்திற்கும் ம.சா.ஆ.12 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பத்திற்கும் எதிரியின் ஆதார் அட்டையில் உள்ள கையொப்பத்திற்கும்

வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை.

3) எதிரியின் ஆவணங்கள் எதுவும் எதிரியால் நேரடியாக எனக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும், எதிரியின் கணவர் வீரக்குமார் என்பவர் மூலமாக எனக்கு கிடைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஏலச்சீட்டு நடத்துகிறேனா என்றால் இல்லை. எதிரியின் கணவர் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்று தருமாறு எதிரியின் 10 காசோலைகளை என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி காசோலைகளில் மோசடி கையொப்பம் செய்து எதிரி கடன் பெற்றதாக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அங்கன்வாடி பணியாளர் என்பதால் என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ஒரு கடனை திரும்ப செலுத்துவதற்குள் ஒரு வாரகாலத்திற்குள் அடுத்தடுத்து எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்லியிருப்பது நம்பும்படி இல்லை என்றால் எதிரி என்னுடன் நட்பாக பழகியதாலும், எதிரியின் வீட்டை சரிசெய்வதற்காகவும், எதிரியின் கணவரின் தொழில் விருத்திகாக கேட்டதால் நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன்.

4) நான் எதிரிக்கு 6 முறை எவ்வாறு கடன் கொடுத்தேன் என்றால் எதிரிக்கு 7 முறை கடன் கொடுத்திருக்கிறேன். 6 முறை எனது நகையை அடமானம் வைத்தும், ஒரு முறை என் கைசெலவிற்காக என் கணவர் அனுப்பிய பணத்தையும் கொடுத்தேன். எதிரியும் அவரது கணவர் வீரக்குமாரும் பிரிந்து வாழ்கின்றனரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியும் எதிரியின் கணவரும் பிரிந்து இருப்பதாலும், எதிரியின் கணவர் எனக்கு நண்பர் என்பதால் எதிரியின் கையொப்பத்தை போலியாக செய்து எதிரியின் கணவருக்காக எதிரியை பழிவாங்க இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. ஊர்க்காரர்கள் மற்றும் பஞ்சாயத்தார்களை வைத்து பேசி எதிரியின் காசோலைகளை திரும்ப கேட்டபோது நான் கொடுக்க மறுத்துவிட்டேன் என்றால் அவ்வாறு எந்த நிகழ்வும் நடைபெறவில்லை. எதிரிக்கும் அவரது கணவருக்கும் உ ள்ள பிரச்சனையில் நான் தலையிட்டு எதிரியின் கணவருக்கு ஆதரவாக நான் பொய் வழக்கை எதிரி மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் கணவரும் நானும் நட்பாக பழகியதை எதிரி

**கண்டித்ததால் எதிரியின் கணவர் எதிரி மீது கோவப்பட்டு என் மூலமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.**

**5) எதிரியை பழிவாங்கும் நோக்கத்தில் நான் பல்வேறு தேதிகளில் கடன் கொடுத்தாக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலைக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's
விரைவு நீதிபதி காரைக்குடி